கி.பி.1775இல் படைக்கப்பெற்ற வசன சம்பிரதாயக்கதை புதின உலகின் முதல் முயற்சி எனலாம். தமிழின் முதல் நாவலும், இரண்டாவது நாவலும் வேதநாயகம் பிள்ளையுடையதாக அமைய, தமிழின் மூன்றாவது நாவலாக பிரேம கலாவத்யம் 1893இல் வெளிவந்தது. 1895இல் தி.த. சரவண முத்துப்பிள்ளை எழுதிய மோகனாங்கி தமிழின் முதல் வரலாற்று நாவலாகும். இந்நூலின் தாக்கத்தைக் கல்கியிடமும், சாண்டில்யனிடமும் காண முடிகின்றது. மோகனாங்கி எனும் பெயர் கற்பனையாக இருப்பினும் அது ராணி மங்கம்மாள் கதையைச் சுட்டுவதாகும்.

மேற்குறிப்பிட்ட நான்கு நூல்களும் தமிழ் நாவல்களின் முன்னோடிகளாய் விளங்கினும், தமிழ்த் திறனாய்வாளர்கள் கூறும் நாவலுக்கான பண்புகளோடு அமையும் முதல் நாவல் ராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரமே என்பர். இதே காலத்தில் எழுந்த வேறொரு நாவல் மாதவய்யாவின் பத்மாவதி சரித்திரமாகும். கமலாம்பாள் கிராமத்தைச்சுற்றிவர, பத்மாவதி கிராமத்தை விட்டுப் புலம் பெயர்ந்து நகரம் போவதால் ஏற்படும் பண்பாட்டுச் சிதைவைச் சுட்டுகிறது.

வேதநாயகம் பிள்ளை ஓய்வுபெற்ற பின் நாவல் எழுதினார். ஆனால் ராஜம் ஐயர் தம் 21 ஆம் வயதிலும், மாதவய்யா தம் 20 ஆம் வயதிலும், மோகனாங்கி எழுதிய சரவண முத்துப்பிள்ளை தம் 27ஆம் வயதிலும் நாவல் எழுதிச் சாதனை புரிந்துள்ளனர்.

1896இல் இராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரம் நூல் வடிவம் பெற்றாலும் மூன்றாண்டுகள் (1893-95) விவேக சிந்தாமணி இதழில் தொடர்கதையாக வெளிவந்தது. இந்நாவலுக்கு 'ஆபத்துக்கு இடமான அபவாதம்' என்றொரு பெயரும் உண்டு.

1894இல் பண்டித நடேச சாஸ்திரியார் தானவன் என்ற தலைப்பில் துப்பறியும் நாவல் எழுதினார். 1900இல் தீனதயாளு எனும் நாவலை வெளியிட்டார். இவர் தம் நாவலையே தமிழின் முதல் நாவல் என்கிறார். 1898இல் வெளிவந்த 'மீதிஇருள்' இந்துக்குடும்பம் கிறித்துவத்திற்கு மாறி அதனால் ஏற்படும் சமயப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டது. சமுதாயச் சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டு மாதவய்யா நாவல்கள் எழுதினார். இவரது பத்மாவதி சரித்திரம் சிறப்பாகப் பேசப்படும் நாவல். இந்நாவலோடு விஜயமார்த்தாண்டம், முத்து மீனாட்சி, கிளாரிந்தா ஆகிய நாவல்களும் எழுதியுள்ளார்.

தி.ம. பொன்னுசாமிப் பிள்ளை இக்காலக் கட்டத்தில் மிகுதியான நாவல்கள் எழுதியவர். உலகில் தாம்பெற்ற அனுபவங்களை நாவலாக்கியவர். அந்த வகையில் இவரது நாவல்கள் குறிப்பிடத்தக்கன. 1903இல் கமலாக்ஷி சரித்திரம், 1910இல் விஜயசுந்தரம், 1913இல் ஞானசம்பந்தம், ஞானாம்பிகை, 1920 இல் ஞானப்பிரகாசம், சிவஞானம் ஆகிய நாவல்கள் எழுதியுள்ளார்.

1914இல் வெளிவந்த எஸ்.ஏ. இராமேஸ்வரி ஐயரின் நீலகண்டன் நாவல் சிறந்த நாவலாகக் கருதப்பட்டது.

1903 இல் கூடலிங்கம் பிள்ளை எழுதிய மங்கம்மாள் இரண்டாவது வரலாற்று நாவலாக வெளிவந்தது. முதல் வரலாற்று நாவல் மோகனாங்கியின் கதையை அடிப்படையாகக் கொண்டே இந்நாவல் அமைந்தது. இவ்விரண்டு வரலாற்று நாவல்களும் தமிழ்நாட்டைப் பின்னணியாகக் கொண்டிருந்தன. ஆயின் 1910இல் பி.குழந்தைசாமிப் பிள்ளை எழுதிய சத்தியவல்லி வேறு மாநிலப் பின்னணியில் (இராஜஸ்தான்) எழுதப்பட்ட முதல் நாவல் எனலாம்.

1900 முதல் 1939 வரை பெரும்பாலும் ஆங்கில நாவல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சியே நடைபெற்றது. குறிப்பாகத் துப்பறியும் நாவல்கள் மிகுதியாகத் தோன்றின. இவை இலக்கியத்தை வளர்க்கவில்லை. வடுவூர் துரை சாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார் ஆகிய இவ்விருவரும் நூற்றுக் கணக்கில் ஆங்கில நாவல்களைத் தமிழாக்கி குவித்தனர். பாமரமக்களையும் படிக்கச் செய்த பெருமை இவர்களுக்குண்டு. சாமிநாத சர்மா ஆரணியின் உழைப்பைப் பெரிதும் பாராட்டுவார்.

மறைமலையடிகள் குமுதவல்லி எனும் நாவல் எழுதினார். இதுவும் ஆங்கிலத் தழுவல். தனித்தமிழ் நடையில் அமைந்திருந்தது. ந. பலராமையர் 1897இல் லீலை எனும் நாவலைத் தொடராக எழுதினார். 1897இல் பரிதிமாற் கலைஞர் மதிவாணன் தொடர் எழுதினார்.

நாகை. கோபால கிருஷ்ணபிள்ளை - தனபாலன், சந்திரோதயம், கற்பகச்சோலை ஆகிய நாவல்களை எழுதினார். சிறந்த யதார்த்தத்தோடும், நகைச்சுவை உணர்வோடும் எழுதுபவர் மீனாட்சி சுந்தரம்மாள். இவரது ஜயசீலன் (1912) நாவல் சிறந்த எடுத்துக்கார்ட்டு.

குருமலை சுந்தரம்பிள்ளை எழுதிய 'பொற்றொடி' நாவல் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. முதற்பதிப்பு வந்தவுடன் விற்றுத் தீர்ந்துவிட்டது.

ஜே.ஆர். ரங்கராஜு துப்பறியும் நாவல்கள் எழுதியதோடு ஆங்கிலத்தில் துப்பறியும் ஷெர்லாக் ஹோம்ஸ் போல் தமிழில் துப்பறியும் கோவிந்தனைப் படைத்தார். 1906இல் இவர் எழுதிய இராஜாம்பாள் பெரும் வெற்றி பெற்றது. 26 ஆண்டுகளில் 29 பதிப்புகளைக் கண்ட நாவல் அந்தக் காலத்தில் இது ஒன்றேயாகும். இதை அடிப்படையாகக் கொண்டே பின்னர் தமிழ்வாணன் தம் நாவல்களில் துப்பறியும் சங்கர்லாலைப் படைத்தார்.

நூற்றுக்கும் அதிகமான கதைகளை எழுதிப் பெரும் பெயர் பெற்ற பெண் எழுத்தாளர் வை.மு.கோதை நாயகி அம்மாள். பெண்கள் பிரச்சனையை மையமாக வைத்து எழுதினார். ஆரணி குப்புசாமி முதலியார் வை.மு. கோதைநாயகியைப் பாராட்டுகின்றார்.

அகிலன் சமூகம், வரலாறு என இருதுறைகளிலும் தம் முத்திரையைப் பதித்தவர். இவரது சித்திரப்பாவை ஞானபீடம் பரிசுபெற்றது. வேங்கையின் மைந்தன் எனும் வரலாற்று நாவல் 1963இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றது. பாவை விளக்கு, வாழ்வு எங்கே ஆகிய நாவல்கள் திரைப்படமாக வெளிவந்தன. கயல்விழி, வெற்றித்திருநகர் இரண்டும் சிறந்த வரலாற்று நாவல்கள்.

நா. பார்த்தசாரதி மு.வ போன்று படித்த இளைஞர்களிடையே செல்வாக்குப் பெற்றவர். சமூகம் சரித்திரம் இருதுறையிலும் நன்கு காலூன்றியவர். இவரது குறிஞ்சிமலர், பொன்விலங்கு சிறந்த சமூக நாவல்கள். பாண்டிமாதேவி, மணிபல்லவம் சரித்திர நாவல்கள். 1971ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது இவருடைய சமுதாய வீதி நாவலுக்குக் கிடைத்தது.

கு. ராசவேலுவின் விடுதலைப் போராட்டம் பற்றிய நாவல் '1942' என்பதாகும். 1966இல் வல்லிக் கண்ணனின் வீடும் வெளியும், 1969இல் ந. சிதம்பரம் சுப்பிரமணியனின் மண்ணில் தெரியுது வானம், நா.பார்த்தசாரதியின் ஆத்மாவின் ராகங்கள், 1968இல் ர.சு.நல்லபெருமாளின் கல்லுக்குள் ஈரம், சங்கரராமின் இன்ப உலகம், ராஜம் கிருஷ்ணனின் வளைக்கரம், 1969இல் வெளிவந்த ஜெகசிற்பியனின் கிளிஞ்சல் கோபுரம், 1970இல் இந்திரா பார்த்த சாரதியின் தந்திரபூமி ஆகியவை சிறந்த விடுதலை உணர்வுமிக்க நாவல்களாகும்.

1940-60 இந்த இருபது ஆண்டுகளில் இருபது நாவல்கள் எழுதியவர் பி.எம்.கண்ணன். பெண்களை மையமாகக் கொண்ட இவரது நாவல்கள் அக்காலத்தில் பெண்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றன. இக்காலத்தில் ஆர். சூடாமணி, அநுத்தமா, லட்சுமி, கிருத்திகா ஆகியோர் சிறந்த நாவல்கள் படைத்தனர்.

1973இல் மாணவர் பிரச்சனையை மையமாக வைத்து நா.பார்த்தசாரதி அவர்கள் சத்திய வெள்ளம் எனும் நாவல் எழுதினார். இவரது குறிஞ்சிமலர், பொன்விலங்கு சிறந்த நாவல்கள். 1966இல் சேரி மக்களிடையே ஏற்படும் மனமாற்றத்தை டி.செல்வராஜ் தம்முடைய மலரும் சருகும் நாவலில் வெளிப்படுத்தினார். 1965இல் வெளிவந்த அகிலனின் புதுவெள்ளம் மேல் தட்டினரின் சுரண்டலை நன்கு வெளிப்படுத்தியது, 1973இல் ராஜம் கிருஷ்ணன் அரசியலை மையமாக்கி எழுதிய வேருக்கு நீர் சிறந்த நாவலாகும். 1975இல் இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல் கம்யூனிசம் செல்வாக்கு மிக்க சக்தியோடு மோதிச் சிதைவதை விளக்கும் நல்லதொரு யதார்த்த நாவலாகும். 1977ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமியின் விருது பெற்ற நாவல் இதுவாகும்.

